**நான் உனக்கு போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்**

சங்கீதம் 32:8

**அன்புடையீர்,**

*ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்*

இந்த வருடத்தில் கடவுள் நமக்கு மீண்டுமொரு புதிய மாதத்தைக் காண கிருபை தந்திருக்கிறார். இந்த கடுமையான சூழ்நிலையில் அவர் நமக்கு தந்திருக்கும் பாதுகாப்புக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த வருடத்தில் கடந்த ஆறு மாதங்ளை கடப்பதற்கு அவர் நமக்கு தந்த வழிநடத்துதலுக்காகவும் இந்த நாட்களில் நாம் சந்தித்த பயங்கரமான சூழ்நிலையிலும் அவர் நமக்கு தந்திருக்கிற வாழ்வுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த புதிய மாதத்திலும் வருகிற காலங்களிலும் ஆண்டவரின் அளவில்லாத அருளின் வாக்குத்தத்தத்தை சிந்திப்போம்.

சங்கீதம் 32:8, இந்த வாக்குத்தத்தம் தருகிற செய்தியின் தலைப்பு

**அதிசயமாய் வழிநடத்தும் கர்த்தர்**

இந்த சங்கீதம் முழுவதும் அவர் நம் பாவங்களை மன்னிக்கிறார். நம் பாவங்களை அறிந்திருக்கிறார். நாம் அவரை நோக்கி கூப்பிடும் பொழுது அவர் நமக்கு பதில் கொடுக்கிறார். நமக்கு மகிழ்ச்சி தருகிறார்.

இந்த மாத வாக்குத்தத்தம் **நான் உனக்கு போதிப்பேன்** என்று கூறுகிறார். நம்முடைய வாழ்க்கை என்பது கடவுளின் கரங்களில் இருக்கிறது. இந்த சூழ்நிலையில் மனிதருடைய போதனைகளைக் கேட்டு வாழ்வதை விட கடவுளின் போதனையை கேட்டு வாழ்வது தான் சிறப்பு. அவர் நமக்கு தரும் போதனை இருதயத்தில் அமைதி, அமர்ந்த தண்ணீர், புல்லுள்ள இடங்களில் குறைவின்றி நிறைவான வாழ்வு. அதோடு, கவலையில்லாமல் எதை தேட வேண்டும். எதை தேட கூடாது. எவ்வாறு பிறரை பார்க்க வேண்டும். எதை செய்ய வேண்டும், எதை செய்யக் கூடாது என்றும் உலக காரியங்களிலிருந்து எவ்வாறு தங்களை காத்துக் கொண்டு அதன் படி வாழ்வதும் தான் கடவுளின் போதனையின் சிறப்பு.

இரண்டாவதாக, **நான் உனக்கு வழிகாட்டுவேன்** என்று கடவுள் நம்மை வழிநடத்துவேன் என்று கூறுகிறார். அன்று தூதர்கள் வழிநடத்தினார்கள், இயற்கை வழிநடத்தினது, மேகஸ்தம்பம், அக்னிஸ்தம்பம், இயேசு பிறந்த போது மேய்ப்பர்களுக்கு தூதர்களும், சாஸ்திரிகளுக்கு நட்சத்திரமும் வழிகாட்டினது. இப்பொழுது நட்சத்திரங்களும், தூதர்களும் அல்ல, நானே உங்களை வழிநடத்துகிறேன் என்கிறார். தாவீது, கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார். இருள் நிறைந்த பாவ உலகில் அவரின் பிள்ளைகள் வழிமாறி போகக்கூடாது என்பதற்காக தான் இயேசு நானே வழி என்று கூறுகிறார். அவர் வழியாய் நாம் செல்லும் பொழுது ஜெயமுண்டு. வெற்றி உண்டு. உன் வழிகளெல்லாம் உன்னைக் காக்கும்படிக்கு என் தூதர்களுக்கு கட்டளையிடுவேன். நான் உங்களிலிருந்து வாழ்ந்து காட்டுவேன். அவரே வாழ்வாக இருப்பதுதான் இரண்டாவது குறிப்பு.

மூன்றாவதாக, **உன் மேல் என் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுவேன்.** கடவுள் போதிப்பவர் மட்டுமல்ல, வழிகாட்டுகிறவர் மட்டுமல்ல, அவர் உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்றார். அவரின் பார்வை எப்போதும் நம்மீது இருக்கும் என்பதே.

இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை, இரவும், பகலும் என்னை காண்கிறவர் என் பெற்றோர் கூட உறங்கிவிடுவார்கள். என் கடவுளோ எப்போதும் என்னைக் காண்கிறவர், எல்லா நேரங்களிலும் என் உள்ளிந்திரியங்களை அறிந்து கடவுளின் காரியங்களை எனக்கு உணர்த்தி ஆலோசனை வழங்குகிறார்.

நம் வாழ்க்கையில் சில நேரங்களில் கண்ணீர், கஷ்டங்கள், உபத்திரவங்கள், பலவீனங்கள் வரலாம். அவற்றின் மத்தியில் நாம் எவ்வாறு இவைகளை மேற்கொள்ளலாம் என்றும், அவற்றை எதிர்க்க கூடிய தைரியத்தையும் அவர் தருவது தான் ஆலோசனை. ஆக, இந்த ஏழாவது மாதத்தில் கடவுள் நமக்கு நல்ல போதனையை தந்து நமது வாழ்க்கையில் இந்த பயங்கர Covid-19 சூழ்நிலையிலும் வழிநடத்துவாராக.

உலகத்திற்காக, நம் நாட்டிற்காக, நம் மாநிலத்திற்காக, ஆட்சி செய்யும் தலைவர்களுக்காக, இந்த கடுமையான தொற்று கொரோனா ஒழிக்கப்படவும், மீண்டும் புதிய மகிழ்ச்சியுடன் மனுக்குலம் வாழவும் உங்களை ஜெபிக்கக் கேட்டுக்கொள்கிறேன். தென்னிந்திய திருச்சபை பேராயர்கள், சென்னைப் பேராய பேராயர், ஆயர்கள், திருப்பணியாளர்கள், நற்செய்திப் பணியாளர்கள், போரூர் குருசேகர இறைமக்கள், நான்கு திருச்சபைகளின் குடும்பங்களின் தேவைகளுக்காக ஜெபிக்கவும்.

நம்முடைய திருச்சபையின் இறைமக்கள், நம்முடைய பேராய ஆயர்கள் சிலர் இந்த Covid-19 மூலம் பாதிக்கப்பட்டு குணமடைந்துள்ளார்கள். தொடர்ந்து அவர்களுக்காகவும் ஜெபிக்கவும். இந்த காலகட்டத்தில் இந்த தொற்று சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகமாக பரவுவதால் அரசின் ஆலோசனையின்படி விழித்திரு, விலகியிரு, வீட்டிலிரு. தங்களையும், நம் குடும்பத்தையும், சமூகத்தையும் நாம் பாதுகாப்போம். அநேகர் தங்களின் காணிக்கைகளை படைக்கிறீர்கள். உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் குடும்பத்திற்காகவும் உங்களை ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*கடவுள் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் பணிகள், தொழில், வியாபாரம், ஊழியம் அனைத்தையும், நம்முடைய குருசேகரத்தையும், நான்கு திருச்சபைகளையும் ஆசீர்வதிப்பாராக*

நன்றி

இறைபணியில்

**அருள்திரு. C. ஜெயசீலன் ஞானாதிக்கம்**
ஆயர்

# ஆராதனை ஒழுங்கு ஜூலை 2020

| தேதி | நேரம் | பொருள் | போரூர் குருசேகரம் |
|---|---|---|---|
| 01.07.20<br>புதன் | காலை<br>6.30 | *மாதத்தின் முதல் நாள்* | Rev. C. ஜெயசீலன் ஞானாதிக்கம் |
| 05.07.20<br>ஞாயிறு | காலை<br>8.30 | கண்காணித்துவம்:<br>வாழ்வாதாரத்தின்<br>மேல் பொறுப்புள்ள<br>மேலாண்மை<br><br>*யாத்திராகமம் 18:13-27*<br>*2கொரிந்தியர் 8:1-15*<br>*திருப்பாடல் 147:1-11*<br>*மத்தேயு 25:14-30* | Rev. C. ஜெயசீலன் ஞானாதிக்கம் |
| 12.07.20<br>ஞாயிறு | காலை<br>8.30 | அருட்பணி:<br>அனைவருக்கும்<br>நற்செய்தி<br><br>*ஏசாயா 55:1-6*<br>*அப்போஸ்தலர் 10:34-43*<br>*திருப்பாடல் 146*<br>*மத்தேயு 4:17-25* | Rev. C. ஜெயசீலன் ஞானாதிக்கம் |
| 19.07.20<br>ஞாயிறு | காலை<br>8.30 | கடவுளின் மனிதர்கள்<br>கிறிஸ்துவின்<br>பிரதிநிதிகள்<br><br>*யோசுவா 1:1-9*<br>*2கொரிந்தியர் 5:16-6:10*<br>*திருப்பாடல் 18:1-6,20-30*<br>*மாற்கு 6:7-13* | Rev. C. ஜெயசீலன் ஞானாதிக்கம் |
| 26.07.20<br>ஞாயிறு | காலை<br>8.30 | அருள்பொழிவுத்<br>திருப்பணி:<br>மாற்றுருவாக்கத்திற்கான<br>மாற்றுருவாக்கம்<br><br>*எசேக்கியேல் 33:1-9*<br>*1தீமோத்தேயு 3:1-13*<br>*திருப்பாடல் 99*<br>*யோவான் 21:15-19* | Rev. C. ஜெயசீலன் ஞானாதிக்கம் |

# செய்திகள்

1. ஒவ்வொரு ஞாயிறும் காலை 8.30 மணிக்கு காணொளி வழியாக ஆராதனை ஆயர் மூலம் நடத்தப்படும்.
2. இந்த மாதம் உபவாச ஜெபம் நடைபெறாது
3. தூய மத்தேயு ஆலயம் கல்லறை நிலம் வாங்கிய கடன் திருப்பி கொடுக்க ஜெபிப்போம். இன்னும் இதற்கு உதவி செய்யாதவர்கள் உதவி செய்ய கேட்டுக் கொள்கிறேன்.
4. தூய யோவான் ஆலயம் ஐயப்பன்தாங்கல், நல் மேய்ப்பர் ஆலயம் இரண்டாங்கட்டளை, புதிய ஆலயங்கள் கட்டப்பட ஜெபிக்கவும். வெற்றிச் சிலுவை ஆலய மணி கூண்டு கட்ட ஜெபிக்கவும்.
5. Covid 19 நிவாரண நிதி கொடுக்க விரும்புகிறவர்கள் கீழ் காணும் வங்கி கணக்கில் வங்கி பரிமாற்றம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

   Account Name:CSI St. Matthews Church Poor Fund Account
   Account Number:156601000003712
   Type : Savings
   Bank: Indian Overseas Bank, Trunk Road, Porur
   Branch : Porur
   IFSC Code: IOBA0001566
6. வேதவினா விடைகளை தயவுகூர்ந்து நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எப்போது ஆலய வழிபாடு நடைபெறுகிறதோ அப்பொழுது கொண்டுவரவும். கேள்விகள் மட்டும் அனுப்பப்படும். விடைகள் இப்போது கொடுக்கப்படமாட்டாது. உங்கள் விடைத்தாளும் திருத்தப்படமாட்டாது. ஊரடங்கு அமலில் இருப்பதால் தயைகூர்ந்து ஆலயத்திற்கு கொண்டுவர வேண்டாம் வேறு எந்த electronic media வழியாகவும் அனுப்ப வேண்டாம்.
6. அரசு உத்தரவுப்படி நீங்கள் வீட்டிலிருந்தபடியே காணொளி மூலம் ஒளிபரப்பப்படும் வழிபாட்டில் பங்குபெறுங்கள். ஆலயத்திற்கு வந்து ஜெபிப்பது, ஆலயத்திற்கு வருவது இவைகளை தயைகூர்ந்து தவிர்க்கவும். அவசிய தேவை இருப்பின் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள். காரணம், இந்த கொரோனா நோய் தொற்று இப்பொழுது தான் தீவிரமடைகிறது. உங்களை தற்காத்துக்கொள்ளுங்கள்.

# BIBLE QUIZ - 72

## *(யாத்திராகமம் 1-7)*

1. கர்த்தர் மோசேக்கு தரிசனமானதை இஸ்ரவேலர் நம்புவதற்கு கர்த்தர் கொடுத்த அடையாளங்கள் என்ன?
2. மோசேயின் பெற்றோர் யார்?
3. மோசே கண்ட அற்புத காட்சி என்ன?
4. லேவியின் குமாரர் யார்?
5. எகிப்தின் ராஜா எப்போது உங்களைப் போக விடுவான் என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்னார்?
6. தேவனால் நன்மை பெற்றவர்கள் யார்? ஏன்?
7. இஸ்ரவேலரின் முற்பிதாக்களோடே கர்த்தர் ஏற்படுத்தின உடன்படிக்கை என்ன?
8. 'நானே கர்த்தர்' என்று எகிப்தியர் எப்போது அறிவார்கள் என கர்த்தர் சொன்னார்?
9. கர்த்தர் மோசேயினிடத்தில் தன்னுடைய பெயர் என்ன என்று சொன்னார்?
10. மோசே பார்வோனிடத்தினின்று எங்கு தப்பியோடினான்?
11. செங்கல் வேலைக்கு வைக்கோல் கொடுக்க வேண்டாம் என்று பார்வோன் ஏன் சொன்னான்?
12. இஸ்ரவேலர் எப்போது தலைகுனிந்து கர்த்தரை தொழுது கொண்டார்கள்?
13. 'கர்த்தர் உங்களைப் பார்த்து நியாயந்தீர்க்கக்கடவர்' -சொன்னது யார்? யாரிடம்?
14. பார்வோன் இஸ்ரவேலரை எப்படி ஒடுக்கினார்கள்?
15. ஆறாம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட கர்த்தருடைய பெயர் என்ன?
16. பார்வோனோடே பேசும் போது மோசே மற்றும் ஆரோனின் வயது என்ன?
17. கர்த்தர் முட்செடியிலே ஏன் இறங்கினார் என்று மோசேயினிடத்தில் சொன்னார்?
18. மோசே என்றால் என்ன?
19. கர்த்தர் ஏன் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தினார்?
20. இஸ்ரவேலர் ஏன் மோசேக்கு செவிகொடாமற்போனார்கள்?

21. மோசே ஏன் தன் குமாரனுக்கு கெர்சோம் என்று பேரிட்டான்?
22. மோசேக்கு தீர்க்கதரிசியாயிருந்தவர் யார்?
23. தன் சொந்த மகனையே சம்பளத்திற்காக வளர்த்தவள் யார்?
24. 'நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்' - சொன்னது யார்? யாரிடம்?
25. மோசேக்கு வாயாக இருந்தவன் யார்? ஏன்?

**குறிப்பு**: *வசனங்களை அப்படியே எழுதாமல் கேள்விக்கு உகந்த விடைகளை ஓரிரு வார்த்தைகளில் எழுதினால் மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்*
*வசனங்களை அப்படியே எழுதினால் மதிப்பெண் கொடுக்கப்படமாட்டாது*

- **உங்களது சந்தா எண்ணை குறிப்பிடவும்**
- **உங்கள் திருச்சபையின் பெயரை குறிப்பிட மறவாதீர்கள்**

பெயர் எழுதவேண்டிய சரியான முறை

**Name :**
**Sub No :**
**Bible Quiz 72**
விடைகள்
1.
2.
3.
4.
*Sample*

**விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி**

திருமதி. ரமிலா எப்சி ஜெயசீலன்
(BIBLE QUIZ - 72)
8/28, Church Street, Porur, Chennai - 116

## இம்மாத வாக்குத்தத்தம்

# நான் உனக்கு போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்

சங்கீதம் 32:8

## வேதவினா போட்டி விடைகள்

**வேதவினா போட்டிகள் 69, 70, 71 மற்றும் 72 கேள்விகள் மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதத்திற்கான இதழ்களில் கேட்கப்பட்டுள்ளன. இதற்கான விடைகளை ஆலயம் திறக்கப்பட்டு ஆராதனைக்கு வரும்போது எடுத்து வந்தால் போதுமானது. அதற்கு பின்பாக தான் விடைகள் திருத்தப்படும்.**

இதழ் பெற முடியாதவர்களுக்கு விடை எழுத உரிய நேரம் ஆலயம் திறந்த பின்னர் கொடுக்கப்படும்.

**வீட்டில் இருக்கும் நாட்களில் வேதத்தை தியானிக்க உதவியாக இந்த வேதவினா ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படுகிறது. இந்த வேத வினா மூலம் வேதத்தை நன்கு கற்க தேவன் உதவி புரிவாராக.**

**அன்பானவர்களே**

கொரோனா தொற்று அதிகமாகி வரும் இந்த நாட்களில் வீட்டில் இருந்தே வழிபாட்டில் பங்குபெற அன்புடன் கேட்கிறோம்.

**அரசின் ஆணைக்கிணங்க ஆலயத்திற்கு வருவதை தவிர்க்கவும். ஏதேனும் தேவை இருப்பின் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.**

கொரோனா தொற்று வியாதி ஆகையால் யாரையும் அது பாதிக்காதபடி அரசு ஊரடங்கு அறிவித்திருக்கிறது. ஆகவே நாம் அரசின் உத்தரவுக்கு கீழ்ப்படிவோம்.

**வீட்டிலிருந்து ஜெபிப்போம். குடும்பத்தை கொரோனா தொற்றிலிருந்து காப்போம்**

# சகோதரிகளுக்கு

**கர்த்தரைக் கண்டடைய தக்க சமயத்தில் அவரை தேடுங்கள்.**
**அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்**

ஏசாயா 55:6

*கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே,*

*ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்*

கடவுளின் பெரிதான கிருபையால் இந்த ஆண்டின் ஆறு மாதங்களை கடந்து வரவும் இந்த புதிய ஏழாவது மாதத்தை காணவும் நமக்கு கிருபை அளித்திருக்கிறார். தற்காலத்தில் உலகில் ஏற்பட்டுள்ள பெரிய பாதிப்பை நாம் அறிவோம். அநேக நம் நண்பர்கள், உறவினர்கள் இந்த பாதிப்புக்குள்ளானதை நாம் அறிவோம். காரணம் புரியாமல் உலகமே வியந்து கொண்டிருக்கிறது. இந்த காலக்கட்டத்தில் கடவுள் நம்மை மீண்டும் இந்த புதிய மாதத்தை காணவும், அவரைத் துதிக்கவும் வாய்ப்பளித்திருக்கிறார்.

இம்மாதத்தில் தாவீது, சங்கீதம் 9ம் அதிகாரம் 10ம் வசனத்தில்

**கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுவதில்லை.**
**ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.**

குழந்தை தன் தாயைத் தேடும், ஆடுகள் தன் மேய்ப்பனைத் தேடும், காரணம் அவற்றின் தேவைகளுக்காக. அது போல கடவுளின் பிள்ளைகள் அவரைத் தேட வேண்டும். உலகத்தின் காரியங்களை தேடுவதை விட உன்னதரை தேடும் பொழுது

**கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது**

அவர்களை அவர் கைவிடமாட்டார். உன் தாய், தகப்பன் உன்னை கைவிட்டாலும் நான் உன்னை கைவிடமாட்டேன் என்றவர் எந்த சூழ்நிலையிலும் அவர் நம்மை தம் கரத்தில் வைத்திருக்கிறார். கரம்பிடித்து நடத்துகிறார். விழும்போது தூக்கிவிடுகிறார். நன்மையால் உன் வாயை திருப்தியாக்குகிறார்.

அவரின் நாமம் **இருக்கிறவராகவே இருக்கிறேன்**. நம்மை படைத்தவர், நம்மை பெற்றெடுத்தவர், வாழ்வு கொடுத்தவர், வாழ வைத்தவர், வாழ்ந்து கொண்டிருப்பவர். அவர் அல்பா ஓமேகாவும், ஆதியும் அந்தமுமானவர். அப்பேர்பட்ட சர்வ வல்லமையுள்ளவரின் பெயரை அறிந்திருக்கிறவர்கள். அவர்கள் வேறு எதையும் நம்பாமல் **அவரையே நம்பியிருப்பார்கள்**. ஆம் பிரியமான சகோதரிகளே இந்த கொடிய கால கட்டங்களில் பெண்களாகிய நமக்கு இருந்துவரும் பயம், குடும்பசுமை, பலவீனம், பொருளாதார நெருக்கடி, குடும்பத்தை குறித்த கவலை, பணி சுமை, இவற்றின் மத்தியில் இந்த வசனம் நமக்கு கொடுக்கிற உந்துதல், எந்த சூழ்நிலையிலும் அவரை

தேடுவதை மறந்துவிடக் கூடாது. அவரைத் தேடும் பொழுது அவர் நம்மை தாங்கிக் கொண்டிருப்பதை உணரமுடியும். காரணம், அவரின் நாமத்தை அறிந்திருப்பதால், அவரை நம்பி இருப்பதால், அவரின் வல்லமை நம்மேல் இருக்கிறது. இந்த தைரியம் நமக்கு வர வேண்டும். ஆக, இந்த நம்பிக்கையில், இத்தகைய Covid-19 காலத்தில் அவரின் ஆலோசனையின்படி நம்மை தற்காத்துக் கொள்ளவும், இந்த தீமை வளராமல் அகற்றப்படவும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*கடவுள் இந்த புதிய மாதத்திலும்*
*உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்துப் பாதுகாப்பாராக.*

இப்படிக்கு
இறைபணியில்
உங்கள் அன்பு சகோதரி
**திருமதி. ரமிலா எப்சி ஜெயசீலன்**
(ஆயரம்மா)

எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளை திடப்படுத்தினார்கள்
நெகேமியா 2 : 18

# ஆலயங்கள் கட்டுமானப் பணி

## தூய யோவான் ஆலயம்

ஐயப்பன்தாங்கல்

&

## நல் மேய்ப்பர் ஆலயம்

இரண்டாங்கட்டளை



**உதாரத்துவமாய் கொடுங்கள்** **உற்சாகமாய் ஜெபியுங்கள்**

# ஜூலை மாதம் பிறந்த நாளை காண்கிற திருச்சபை அங்கத்தினர்கள்

## தூய மத்தேயு ஆலயம், போரூர்

| **01/07/2020 - Wednesday** |
|---|
| Mr. Surendrakumar T |
| Mrs.Irene Chandra |
| Baby Jeffy Gavin |
| Miss.Prarthana Elizabeth Jothi |
| Baby Sharon Cynthia |
| **02/07/2020 - Thursday** |
| Miss.A Sandhya |
| Mrs.Anita |
| Katherine Grace P |
| Mrs.Mercy Pushpam.M |
| Mrs.Sheela Rani |
| **03/07/2020 - Friday** |
| Master.Jason Joze S |
| Mrs.Shanthi Nirmala |
| Miss.Sheryl Lindsay Arun |
| **04/07/2020 - Saturday** |
| Mrs.Angel Thabetha |
| Mrs.Devakirubai Rani |
| Mrs.Golda Mary |
| Baby.Isha Angel A |
| Mrs.Jasmine Sally |
| Mr.Jefflin Immanuel |
| Mr.Paul Kirubakaran M |
| Mr.Robert Kennady J |
| Mr.Roshan |
| **05/07/2020 - Sunday** |
| Mr.Christhudhas A |
| Mr.Judha David |
| Miss.Shannen Catherin |
| Mr.Stanli |
| Mrs.Suseela |
| Mrs.Veni Evangelin A |
| **06/07/2020 - Monday** |
| Mrs.Dhalia Sweetlin |
| Miss.Esther Sandhiya |
| Mrs.Helen |
| Mr.James Ponselvan |
| Mr.Jebes Jaikumar |

| **07/07/2020 - Tuesday** |
|---|
| Miss.A. Kiruba |
| Mrs.Grace Muthukani |
| Mrs.Jenifer Aparna Princess A |
| Mrs.Mary S J |
| Mrs.Nandhini P |
| Mr.Prince Rathnaraj |
| **08/07/2020 - Wednesday** |
| Miss. Adrienne Shiona A |
| Mrs.Chandra |
| Mr.Daniel Moses D |
| Miss.Ruby SIngh R |
| Miss.Shanthi Solitta |
| **09/07/2020 - Thursday** |
| Master.Breezshlin |
| Mr.Dharmaraj John Christoper |
| Mrs.Eva Ezekiel |
| **10/07/2020 - Friday** |
| Baby. Japhia Godlene |
| Mr.Kannaian |
| Mr.Lijin |
| **11/07/2020 - Saturday** |
| Mrs.Abitha Anandha Soundharya |
| Mr Augustin Ponraj S |
| Master.John Kevin |
| **12/07/2020 - Sunday** |
| Miss.Diana Rachel |
| Mr.Gnanamuthu |
| Mrs.Kamalam Paulraj |
| Mr.Kingston J |
| **13/07/2020 - Monday** |
| Mrs.Deepa Solomon |
| Mr.Jeba Suresh |
| Master.Joshuva Jebaraj V |
| **14/07/2020 - Tuesday** |
| Miss.Adlin Jebakumari |
| Miss.Amirtha Malar |
| Miss.Gathrein Viondhini |
| Mrs.Irudhaya Louisa |

| |
|---|
| **15/07/2020 - Wednesday** |
| Mrs.Amaravathi Santhosh Kumari |
| Mr.Ashwin Kumar |
| Miss.Jenet P |
| Mr.John Joseph L S |
| Mr.Meison Raj T |
| Miss Prabhalakshmi K B |
| Mr.Vincent N |
| **16/07/2020 - Thursday** |
| Miss.Florence |
| Mr.Samraj Immanuel |
| **17/07/2020 - Friday** |
| Miss.Elfin Dania |
| Mr.Johnson M |
| Mrs.Latha Priyadharshini B |
| Master.Rajkumar |
| **18/07/2020 - Saturday** |
| Mrs.Elizabeth |
| **19/07/2020 - Sunday** |
| Mr.Edwin Vinoth Kumar R |
| Mrs.Gnanaselvam Margaret V |
| Mr.Hubert R |
| Mrs.Mercy Plarience Jesaiah |
| Mr.Philemon Anandaraj S |
| Mrs.Shoba J |
| Mrs.Sudha Selvarani A |
| Baby.Zach Mathuram Wiselin |
| **20/07/2020 - Monday** |
| Mr.Kumaran |
| Mr.Rajasingh Selvakumar |
| Mr.Santhosh Kumar V R |
| Mr.Vivek A |
| **21/07/2020 - Tuesday** |
| Mr.Andrew Singh R |
| Miss.Chris Jefflyn |
| Mr.Mathew Praveen J |

| |
|---|
| **22/07/2020 - Wednesday** |
| Mr. Paul Thambaiah B |
| Mrs.Beni Roby |
| Mr.Gladrin Gideon Aroul |
| Mrs.Jeba Sheeba |
| Mr.Joshua |
| Mrs.Victoria Santha Kumari S |
| **23/07/2020 - Thursday** |
| Mr.Kadatcham Y |
| Mrs.Nancy Winola E |
| Mr.Satheesh |
| **24/07/2020 - Friday** |
| Mr.Padmaraj S J |
| **26/07/2020 - Sunday** |
| Master.Bershlin |
| Mr. Jani Dami Gnana Sheelan |
| Miss.Jessika W |
| Mrs.Lena M |
| Mrs.Lincy Benitta James |
| Mr.Rajakumar Arthur J |
| Mrs.Vanaja Tamilselvi J |
| **27/07/2020 - Monday** |
| Mr.George B |
| Master.Godson Gurubath |
| Miss.H. Jency Gnaha sobi |
| Mr.Koil Raj V |
| Mrs.Reena W |
| Mrs.Savithri Devaraj |
| **28/07/2020 - Tuesday** |
| Mr.Wiselin Dhas Mathuram |
| **29/07/2020 - Wednesday** |
| Miss.Angelin |
| Mr.Balachander V |
| Mr.Esudass |
| Mr.Jacob Anandaraj A |
| **30/07/2020 - Thursday** |
| Mr.Justin John V |
| **31/07/2020 - Friday** |
| Mrs.P.Jeya Dorathi |
| Mr.Rajasekar T |

## நல் மேய்ப்பர் ஆலயம், இரண்டாம்கட்டளை

**01.07.2020 - Wednesday**

| |
|---|
| Mr. Perumal |

**03.07.2020 - Friday**

| |
|---|
| Mr. Solomon Subramony |

**05.07.2020 - Sunday**

| |
|---|
| Ms. Faithlin Joy |
| Mr. Rajabathar |

**08.07.2020 - Wednesday**

| |
|---|
| Ms. Mercy Margret |

**10.07.2020 - Friday**

| |
|---|
| Mr. Michael Theerthapathy |

**11.07.2020 - Saturday**

| |
|---|
| Mr. Jacob Johnson |

**13.07.2020 - Monday**

| |
|---|
| Ms. Emimal |
| Mr. Samuel |

**17.07.2020 - Friday**

| |
|---|
| Ms. Elanjiyam |
| Ms. Janci Rani |
| Ms. Juliet |

**21.07.2020 - Tuesday**

| |
|---|
| Ms. Pavithra |

**22.07.2020 - Wednesday**

| |
|---|
| Baby. Moselin |
| Ms. Pauline |
| Ms. Shenbagam |

**24.07.2020 - Friday**

| |
|---|
| Mr. Deepak |

**25.07.2020 - Saturdayday**

| |
|---|
| Mr. Sathish |

## தூய யோவான் ஆலயம், அய்யப்பன்தாங்கல்

**12.07.2020 - Sunday**

| |
|---|
| Mr. Samuel L |
| Ms. Jothi Rathna V |

**18.07.2020 - Saturday**

| |
|---|
| Mr. Deepak Sanjay S |

**19.07.2020 - Sunday**

| |
|---|
| Ms. Sanga Mithrai G |

**20.07.2020 - Monday**

| |
|---|
| Mr. Paul Sivaraman |

**23.07.2020 - Thursday**

| |
|---|
| Mr. Julius J |

**27.07.2020 - Monday**

| |
|---|
| Ms. Jansi Rani F |

## வெற்றிச் சிலுவை ஆலயம், ஆகாஷ்நகர்

**04.07.2020 - Saturday**

| |
|---|
| Mr. Thomas L |

**06.07.2020 - Monday**

| |
|---|
| Ms. Amutha Ananthiya G |
| Ms. Sreeja C |

**07.07.2020 - Tuesday**

| |
|---|
| Mr. Paul Raj D |

**11.07.2020 - Saturday**

| |
|---|
| Mr. Devadhas T |

**17.07.2020 - Friday**

| |
|---|
| Ms. Geetha |

**28.07.2020 - Tuesday**

| |
|---|
| Ms. Nisha Korah |

# ஜூலை மாதம் திருமண நாளை காண்கிற திருச்சபை அங்கத்தினர்கள்

## தூய மத்தேயு ஆலயம், போரூர்

| |
|---|
| **01/07/2020 - Wednesday** |
| Mrs & Mr.Isaac Thambiraj Y |
| Mrs & Mr.Rajakumar |
| **03/07/2020 - Friday** |
| Mrs & Mr.Amalraj S V |
| **04/07/2020 - Saturday** |
| Mrs & Mr.Aroan G |
| **05/07/2020 - Sunday** |
| Mrs & Mr.Johnson J |
| Mrs & Mr.Selvakumar D |
| **06/07/2020 - Monday** |
| Mrs & Mr.Daniel Durai R F |
| **07/07/2020 - Tuesday** |
| Mrs & Mr.Rajendran R |
| **09/07/2020 - Thursday** |
| Mrs & Mr.Andrew Jayasingh I |

| |
|---|
| **10/07/2020 - Friday** |
| Mrs & Mr.Amirtharaj Muthaiah J |
| Mrs & Mr.Immanuel N Rajamanickam |
| Mrs & Mr.Pradeep R |
| **11/07/2020 - Saturday** |
| Mrs & Mr.Devanbu N |
| Mrs & Mr.Franklin C |
| **12/07/2020 - Sunday** |
| Mrs & Mr.Peter Selvakumar |
| **13/07/2020 - Monday** |
| Mrs & Mr.David Victor G |
| **15/07/2020 - Wednesday** |
| Mrs & Mr.Philip Kumar J |
| Mrs & Mr.Selvanathan G |
| **16/07/2020 - Thursday** |
| Mrs & Mr.Augustin D |
| **29/07/2020 - Wednesday** |
| Mrs & Mr.John sukumar |
| **30/07/2020 - Thursday** |
| Mrs & Mr.J. Joshua |

## நல் மேய்ப்பர் ஆலயம், *இரண்டாம்கட்டளை*

**01.07.2020 - Wednesday**

| |
|---|
| Mrs & Mr. Yesudhas |

**15.07.2020 - Wednesnday**

| |
|---|
| Mrs & Mr. Mathew Rajan |

## தூய யோவான் ஆலயம், *அய்யப்பன்தாங்கல்*

**07.07.2020 - Tuesday**

| |
|---|
| Mrs & Mr. Franklin Selvakumar S |

**14.07.2020 - Tuesday**

| |
|---|
| Mrs & Mr. Devaraj |
| Mrs & Mr. Jacob Raj D |

## வெற்றிச் சிலுவை ஆலயம், *ஆகாஷ்நகர்*

**04.07.2020 - Saturday**

| |
|---|
| Mrs & Mr. Santa Kumar |